# தி.மு.க.வின் பவளவிழா நிறைவு ஆண்டு:

# ஒரு பண்பாட்டு அரசியல் இயக்கத்தின் நெடும் பயணம் 6

நேற்று முன்தினத் தொடர்ச்சி...

தேர்தலுக்கு முன்பாக கலைஞருக்கு கலையுலக பொன்விழா 14.04.1996-இல் நிகழ்ந்தது. இவ்விழா வினுக்குப் பிறகு தேர்தல் நடைபெற்றது. 233 இடங்களுக்குத் தேர்தல் நடந்தது. தி.மு.கழகக் கூட்டணி 220 இடங்களில் வெற்றி பெற்றது. அதன் விவரமாவது:-

| | |
|---|---|
| தி.மு.க. | - 172 |
| த.மா.கா. | - 39 |
| சி.பி.ஐ. | - 8 |
| பார்வர்டு பிளாக் | - 1 |
| | ------ |
| | 220 |
| | ------ |
| **இதர கட்சிகள்** | |
| அ.தி.மு.க. | - 4 |
| பா.ம.க. | - 4 |
| ஜனதா தளம் | - 1 |
| பா.ஜ.க. | - 1 |
| ஜனதா கட்சி | - 1 |
| சி.பி.ஐ. (எம்.) | - 1 |
| சுயேச்சை | - 1 |
| | ----- |
| | 13 |
| | ---- |

நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.கழகத்தின் முற்போக்கு கூட்டணியே 37 இடங்களிலும் வெற்றி பெற்றது. தி.மு.க. 17, த.மா.கா.20, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி - 2

**நான்காவது முறையாக கலைஞர் முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். 13.05.1996-இல் பதவி ஏற்பு நிகழ்ச்சிகள் முடிந்தன. கலைஞர் 14-ஆம் தேதி டெல்லி சென்றார். எந்த அணிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இருக்கிற நிலைமைகளைத் தமிழ்நாடு இல்லத்தில் விவாதித்தனர். கலைஞரை அங்கே தலைவர்கள் சந்தித்து உரையாடினர்.**

வி.பி.சிங்கை பொறுப்பேற்றுக் கொள்ளும்படி தலைவர்கள் கோரினர். அவர் மறுத்துவிட்டார். தி.மு.க. அணியினர் தேவகவுடாவை முடிவு செய்தனர். இதனைக் குடியரசுத்தலைவர் சங்கர்தயாள் சர்மாவிடம் தெரிவித்தனர். காங்கிரசும் நிபந்தனையற்ற ஆதரவைத் தருவதாகக் கடிதம் வழங்கியது. ஆனால் குடியரசுத்தலைவரோ வாஜ்பாய் அவர்களை பிரதமராக அழைப்பு விடுத்தார். 16.05.1996-இல் வாஜ்பாய் 11-ஆவது பிரதமராகப் பொறுப்பேற்றார்.

ஆனால் இந்த அமைச்சரவை பெரும்பான்மை இல்லாததால் 13 நாள்களில் பதவி விலகியது. அதன் பிறகு பிரதமர்களாக ஐக்கிய முன்னணித் தலைவர் தேவகவுடா பதவி ஏற்றார். இவரும் காங்கிரஸ் ஆதரவைத் திரும்ப பெற்றதால் பதவியை இழந்தார். பின்னர் ஐ.கே.குஜ்ரால் பிரதமரானார். இந்த அமைச்சரவையில் முரசொலி மாறன், டி.ஆர்.பாலு அமைச்சர்களாகப் பொறுப்பேற்றிருந்தனர்.

**கலைஞரின் 1996 - 2001-ஆம் ஆண்டு ஆட்சி பொற்கால ஆட்சியாகத் திகழ்ந்தது. ஓயாமல் உழைத்தார். சாதனைகளைக் குவித்தார். ஆட்சியில் தேர்ந்த நிர்வாகம் நடந்தது. எதிர்க்கட்சியாகச் சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் பிரதிநிதித்துவமே இல்லாமல் கழகம் இயங்கியதைப்போல அ.தி.மு.க.வால் இயங்க முடியவில்லை. இதை மக்கள் உணரும் படியாகச் செய்து காட்டியது தி.மு.கழகம்.**

பர்கூரில் ஜெயலலிதாவால் வெற்றிப் பெற முடியவில்லை. 1991-96 வரை ஜெயலலிதாவின் ஆட்சியின் அவலங்கள் எவரெஸ்ட் உச்சியில் ஊழலாய் ஆட்டம் போட்டதன் விளைவுகளே அவை!

1999-இல் ஏப்ரல் மாதம் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்பட்டு வாஜ்பாய் பதவியை இழந்தார். அக்டோபர் மாதம் கழகம் கூட்டணி அமைத்தது. வாஜ்பாய் அமைச்சரவையை அமைத்தார். கழகம் பங்கேற்றது.

2001-இல் ஜெயலலிதா மீண்டும் ஆட்சியைப் பிடித்தார். மிக அருமையான நிர்வாகம், சாதனைகள் பல நிகழ்த்திய ஆட்சியை நடத்திய கலைஞரால் மீண்டும் ஆட்சிக்கு வர முடியவில்லை. இந்தப் புதிரை எப்படி விளக்குவது என்று தெரியவில்லை.

**ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த ஒரு மாதத்திலேயே தனது வேலைகளைத் காட்டத் தொடங்கிவிட்டார். 2001- ஜூன் 29-ஆம் தேதி நள்ளிரவில் கலைஞரை ஜெயலலிதா ஆட்சிக் கைது செய்தது. தமிழ்நாடு அதிர்ச்சிக்கு ஆளாகியது. முரசொலி மாறன், டி.ஆர். பாலு, கனிமொழி ஆகியோர் போலீஸ் வண்டியை பின் பற்றினர். கலைஞரின் கைதுவினால் கனிமொழியின்**




**பாட்டியார் சிவபாக்கியத்தம்மாள் அதிர்ச்சியில் மரணம் அடைந்தார்.**

தமிழ்நாடு கொந்தளித்தது. ஏடுகள் அனைத்தும் கண்டித்தன. அறிஞர்கள் கூட்டாகக் கண்டன அறிக்கை தயாரித்து பொது வெளியில் வெளியிட்டனர். ஜெயலலிதாவின் முழு அரக்கத்தனம் வெளிப்பட்டது. தமிழ்நாடு மட்டுமல்ல - உலகமே ஜெயலலிதாவின் ஜனநாயகத்தைப் புரிந்து கொண்டது. அவரது ஆட்சி ஒரு கசப்பான, மோசமான நடவடிக்கையைக் கொண்டதாக இருந்தது.

2001-ஆம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தார். ஆகவே அவர் மீதுள்ள வழக்குகள் வேறு மாநில நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் 08.02.2003 அன்று கழகப் பொதுச்செயலாளர் பேராசிரியர் மனு தாக்கல் செய்து இருந்தார். தொடர்ந்து 17.02.2003 தேதியும் மேலும் ஒரு மனுவினைத் தாக்கல் செய்தார்.

**முரசொலி மாறன் 2003-ஆம் ஆண்டு நவ.23-ஆம் தேதி இரவு 7.00 மணியளவில் உயிர் பிரிந்துவிட்டது. அதுபோது கலைஞர் அருகேயிருந்தார். படிப்பதும் எழுதுவதும் அவரின் முக்கிய இலட்சியமாகக் கொண்டு இருந்தார். அறிவார்ந்தவர். அவரின் இறப்பு கழகத்தில் ஒரு சூன்யத்தை ஏற்படுத்திவிட்டது.**

அறிஞர் அண்ணா நின்று வெற்றிபெற்ற தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் 1967 நவம்பரில் முரசொலி மாறன் மீண்டும் இடைத்தேர்தலில் வேட்பாளராக நிறுத்தப்பட்டு மாபெரும் வெற்றியைப் பெற்றார். அறிஞர் அண்ணா முதல்வராகி விட்டதால் அந்த இடம் ‘காலி’ யாகி அந்த இடத்திலிருந்து மாறன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவர் மக்களவைக்கு 5 முறையும், மாநிலங்கள் அவைக்கு மூன்று முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 7 ஆண்டுகள் அமைச்சராக இருந்தார். அவரது உடல் அரசு மரியாதையுடன் 24.11.2003-இல் சென்னை பெசன்ட் நகர் மின் மயானத்தில் எரியூட்டப்பட்டது.

அவர் எழுதிய ‘ஏன் வேண்டும் இன்ப திராவிடம்?’ - ‘திராவிட இயக்க வரலாறு’ முதல் பாகம் இன்றும் நம்மோடு பேசிக் கொண்டு இருக்கிறது.

2004-ஆம் ஆண்டு தி.மு.கழகம் நாடாளுமன்றத் தேர்தலைச் சந்தித்தது. தி.மு.க. இடம் பெற்ற ஐக்கிய முற்போக்குக் கூட்டணி 40க்கு 40 இடங்களில் வெற்றி பெற்றது. இக்கூட்டணியில் காங்கிரஸ், ம.தி.மு.க., பா.ம.க. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கட்சி, முஸ்லிம் லீக் தி.மு.க.வோடு அங்கம் வகித்தன. 2009, நாடாளுமன்றத் தேர்தலையும் தி.மு.க. எதிர்கொண்டது. ஒன்றிய அரசின் அமைச்சரவையில் தி.மு.க. தொடர்ந்து 10 ஆண்டுகள் பங்கேற்றது. 2014, 2019, 2024-இல் பா.ஜ.க. அரசு ஒன்றிய அரசில் பங்கேற்று ஆட்சி செய்து வருகிறது. 2024 நடைபெற்றத் தேர்தலிலும் 40 இடங்களிலும் தி.மு.க. அணி வெற்றி பெற்றது.

2006 சட்டமன்றத் தேர்தல் நடந்து முடிந்தது. தி.மு.க. தனிப்பெரும்பான்மை பெற முடியவில்லை.98 இடத்தில் மட்டுமே வெற்றி பெற்றது. எனினும் கூட்டணிக் கட்சிகளின் பலத்தினால் கலைஞர் 5-ஆவது முறையாக முதல்வரானார். ஜெயலலிதா இதை ‘மைனாரிட்டி அரசு’ என்று விமர்சனம் செய்து கொண்டு இருந்தார். ஆனாலும் கலைஞர் தமது ஐந்தாண்டு காலத்தை நிறைவு செய்தார். இது அவருக்கு இருக்கும் ஆற்றலை வெளிப்படுத்தியது.

2011-ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் ஜெயலலிதா மீண்டும் முதல்வரானார். ஆட்சியில் அவர் மேல் இருந்த ஊழல் வழக்குகளினால் பல குழப்பங்கள் அடிக்கடி நிகழ்ந்தன. பன்னீர்செல்வம் இரண்டு முறையும், எடப்பாடி கடைசியாக ஒரு முறையும் முதல்வர்கள் ஆனார்கள். இவர்கள் மக்கள் முன் நிறுத்தப்படாத முதல்வர்கள் ஆவர்.

2011 - 2016-க்குப் பிறகும் மக்கள் ஜெயலலிதாவைத் தேர்ந்தெடுத்தனர். மீண்டும் அவர் முதல்வரானார் **2016 - 2021 காலகட்டத்தில்**




**மு.க.ஸ்டாலின் எதிர்க்கட்சித் தலைவராகப் பணியாற்றினார். அதே நேரத்தில் ஸ்டாலின் 2017-ஆம் ஆண்டு கழகத்தின் செயல் தலைவராக நியமிக்கப்பட்டார். கலைஞரின் உடல்நிலைக் குன்றியதன் காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டது.**

முரசொலி பொன்விழா மலர் (1992) தயாரித்து அச்சடிக்க இருக்கிற அட்டைகளை அவர் பார்வைக்கு வைத்த போது மிகுந்த ஆர்வத்தோடு பார்த்து பேசி, விவாதித்து அவற்றுக்கு ஒப்புதல் அளித்தார் கலைஞர். ஆனால் எம்மால் -பவள விழா மலர் (2017) முற்றுப் பெற்று அவரிடம் ‘நாங்கள்’ காட்டியபோது வெறும் புன்முறுவல் மட்டுமே பூக்க முடிந்தது. ஆம்; பேராயியற்கை அவர் மீது தன் கரங்களை நீட்டத் தொடங்கி விட்டது என்பதை நாம் உணர்ந்தோம்.

ஆம்; கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் 07.08.2018 அன்று இயற்கை எய்தினார்; அவர் இருந்தார் ஆனார், முரசொலி மாறன் மரணமுற்ற போது இரங்கல் தலையங்கத்தை ‘சின்னகுத்தூசி’ எழுதினார். கழகத் தலைவர் கலைஞரைப் பேராயியற்கை அழைத்துக் கொண்டது. அன்று முரசொலியில் வெளியான இரங்கல் தலையங்கத்தை நாம் எழுதினோம்.

**‘சாதலின் இன்னாதது’ இல்லை என்று பேசுகிற வள்ளுவர், ‘நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு’ என்றும் கூறுகிறார். இன்னாததைப் பெருமை என்று சொல்வானேன்? ஓர் உரையாசிரியர் எழுதுகிறார், ‘உலகம் தோன்றிய நாள் முதல் இறந்தவர்களின் எண்ணிக்கையே அதி**

**க.திருநாவுக்கரசு**
திராவிட இயக்க ஆய்வாளர்



**கம். இருப்பவர்களின் எண்ணிக்கை குறைவு’. ஆகவே அது பெருமை பெற்றது’ என்கிறார்.**

தமிழினத்திற்கு அந்தப் பெருமை பேரிழைப்பை ஏற்படுத்தி விட்டதே. ஆம்; கலைஞரைப் பேராயியற்கைப் பணி செய்யாமல் தடை செய்துவிட்டது.

மு.க.ஸ்டாலின் கழகத் தலைவர் ஆனார். 2019-ஆம் ஆண்டு ஸ்டாலின் தலைமையின் கீழ், அமைக்கப்பட்ட கழகக் கூட்டணி 39 இடங்களைப் பெற்றது. இந்த வெற்றி எதிர்வரும் தமிழகச் சட்ட மன்றக் கழக வெற்றிக்குக் கட்டியங் கூறுவதாக அமைந்து இருந்தது.

2021 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி மக்களின் பேராதரவுடன் மாபெரும் வெற்றியைப் பெற்றது. தி.மு.க. கூட்டணி 159 இடங்களில் வென்றது. அதில் தி.மு.கழகம் 133 தொகுதிகளைப் பெற்றது. இது தனிப் பெரும்பான்மை யானதாகும்.

முதன் முறையாக மு.க.ஸ்டாலின் முதல்வரானார். சாதனைகள் குவிந்து கொண்டு இருக்கின்றன. 2022 டிசம்பரில் உதயநிதி ஸ்டாலின் அமைச்சரானார். ஸ்டாலின் காலத்திலேயே அவர் இரண்டாவது நாடாளுமன்றத் தேர்தலைச் சந்தித்தார். இதிலும் 40க்கும் 40 இடங்களில் கழகக் கூட்டணி மாபெரும் வெற்றியை ஈட்டியது.

காஞ்சியில் பவள விழா நிறைவுற்ற மறுநாள், 29.09.2024 அன்று உதயநிதி ஸ்டாலின் துணை முதலமைச்சராக பதவி ஏற்றார். நமது நெடும் பயணத்தில் முழுமையாக பங்கேற்றுள்ள அவருக்கு



நமது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தி.மு.கழகத்தின் பவளவிழா நிறைவு கட்டுரையில் தொடராக பல செய்திக் குறிப்புகளை மட்டுமே நாம் எழுதி இருக்கின்றோம். அவை கழகத்தின் முழு வரலாற்றுப் பரிமாணத்தை வழங்காது. முழுமையாக நீர் உள்ள ஒரு பெருங்குளத்தில் பானை ஓட்டின் சில்லை வீசினால் குளத்து நீரை அந்தச் ‘சில்லு’ மூன்று, நான்கு இடத்தில் நீரை வெட்டி விட்டு நீரில் விழுவது போல கழக நிகழ்வுகளின் எம் தொகுப்பு இத்தொடரில் அமைந்திருக்கும். பவள விழாவை நினைவு கூர - சுருக்கமாக எடுத்துரைக்க இது ஒரு கருவி என்று கொள்க.

கழகம் 75 ஆண்டை நிறைவு செய்துவிட்டு 76-ஆவது ஆண்டில் அடி எடுத்து வைத்துவிட்டது. அதன் பலம் கட்சி ரீதியில் அறிஞர் அண்ணா கலைஞர் காலத்து நிலையிலும் மிக வலுவாக இப்போது அமைந்து இருக்கிறது. ஆங்காங்கே கழகத்தின் பொது உறுப்பினர்களின் கூட்டம் நடைபெறுகின்ற செய்திகள் வெளியாகி கொண்டே இருக்கின்றன. இது கீழ் மண்ணை மேலுக்குக் கொண்டு வரும் முயற்சியினைப் போன்றது.

**அறிஞர் அண்ணா காலத்தில் நம்மிடம் கழகத்தையும் ஆட்சியையும் அவர் ஒப்படைத்து சென்றார். இப்போதும் கழகம் வலுவாக இருக்கிறது. ஆட்சியில் நாம் இருக்கின்றோம். நாடாளுமன்ற இரு அவைகளிலும் பலம் வாய்ந்த கட்சியாக இருக்கிறோம். ஸ்டாலின் காலத்தில் பவளவிழா நிறைவின் போது எடுத்த** Stocktaking report **- இது! இதைவிட கழகத்தின் மாட்சிக்கு வேறென்ன அடையாளத்தை எடுத்துச் சொல்லிவிட முடியும்?**

**அறிஞர் அண்ணாவும் கலைஞரும் வற்புறுத்திய மாநில சுயாட்சி கொள்கைகளை எடுத்துரைக்க அவர்கள் சில ‘படிகளை’ நமக்கு அமைத்துக் கொடுத்து இருக்கிறார்கள். அதை மேலும் சிறக்கச் செய்யும் விதமாக கடந்த செப். 28ஆம் தேதி காஞ்சியில் நடைபெற்ற கழகப் பவள விழா நிறைவு கூட்டத்தில் மாநில சுயாட்சி தொடர்பாக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஒரு பிரகடனத்தை வெளியிட்டு இருக்கிறார்கள். “தி.மு.கழகத்தின் நூற்றாண்டைக் கடப்பதற்குள் மாநில சுயாட்சியை வென்றெடுக்க உறுதி ஏற்போம்”** என்று அறிவித்து இருக்கிறார். காஞ்சியில் உள்ள அறிஞர் அண்ணா நினைவகத்தில் உள்ள பார்வையாளர் குறிப்பிலும் மாநில சுயாட்சியைப் பெறுவது தொடர்பாகக் குறிப்பிட்டு கையெழுத்திட்டு இருக்கிறார்.

அதற்கான போர்க்குரலைக் கழகத் தலைவர் எழுப்பி இருக்கிறார். அதை அகில இந்திய அளவில் வடிவம் பெற நாம் பணியாற்ற வேண்டும் என்பதே இந்தப் பவளவிழா நிறைவு நேரத்தில் எமது பேரவா ஆகும். இப் பிரகடனத்தை நிறைவேற்ற கழகத் தலைவருக்கு அனைவரும் துணை நிற்போம்.

மேலும் தி.மு.க. ஒரு பண்பாட்டு அரசியல் இயக்கத்தின் அடையாளம்.அதன் பயணம் - நெடும் பயணமாகும். அதைத்தான் கட்டுரையின் தொடக்கத்தில் ‘திராவிட இயக்கவியல்’ எனக் குறிப்பிட்டு இருந்தோம். அது தொடர்ந்து கொண்டே இருக்கும். இதுவன்றி அதன் அரசியல் செயல்பாட்டில் அதற்குரிய பணிகளை நிகழ்த்தி கொண்டே தி.மு.க. முன்னேறும். அதை தலைவர் ஸ்டாலின் இப்போது நிறைவேற்றி வருகிறார்! அவர் வாழ்க, வாழ்கவெனக் கழகப் பவள விழா நிறைவு ஆண்டில் வாழ்த்துகின்றோம்.

**ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்**
**தாழா துஞற்று பவர்.** **-திருக்குறள்(620)**

●



மேற்கு வங்கத்திலிருந்து 5 தொழிலாளர்கள் கடந்த மாதம் சென்னைக்கு வேலைத் தேடி வந்தனர். சென்னை மத்திய ரயில் நிலையத்தில் திடீர் மயக்கம் ஏற்பட்டதால் சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர் அவர்களில் 3 பேர் சிகிச்சை பெற்று சொந்த ஊர்களுக்குச் சென்றனர். சமர்கான் என்பவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரது உடலுக்கு தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் அஞ்சலி செலுத்தி நிதி உதவி வழங்கினார். அமைச்சர் தனது சொந்த செலவில் அவரது உடலை விமானம் மூலம் அனுப்ப உரிய ஏற்பாடுகளை செய்து கொடுத்தார்.

## திருத்தம்!

02.10.2024 தேதியிட்ட 'முரசொலி'யில் வெளியான எமது கட்டுரையில் 3-ஆவது காலம் 23-ஆவது ‘பாரா’ ஒரு கருத்துப் பிழையோடு இடம் பெற்று இருக்கிறது. அப்பிழையை நீக்கி பின்வருமாறு அப் ‘பாரா’வைப் படித்தறிய கேட்டுக் கொள்கின்றோம்.

“1993 பிப்ரவரி, மார்ச் மாதங்களில் கழகப் பொதுக்குழு, கோவையில் கழகத்தின் 7-ஆவது மாநில மாநாடு எனக் கழகப் பணிகளில் தொய்வில்லாமல் நடந்து கொண்டு இருந்தன. மாநில மாநாடு வெற்றி மாநாடாக அமைந்தது. இதே காலகட்டத்தில் அன்பில் மரணமும் நிகழ்ந்தது”

**- க.தி.**



செப்டம்பர் 30ஆம் நாள் பன்னாட்டு மொழிபெயர்ப்புத் தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த ஆண்டு 30.09.2024 அன்று தமிழ்நாடு பாடநூல் கழகத்தில் நடைபெற்ற மொழிபெயர்ப்புத் தின விழாவில் பல்வேறு மொழிபெயர்ப்பாளர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். விழாவிற்கு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி தலைமை ஏற்று சிறப்புரை ஆற்றினார். மேலாண்மை இயக்குநர் முனைவர். பொ.சங்கர், வரவேற்புரை ஆற்றினார். பேரறிஞர் அண்ணாவைப் பற்றிய ‘மாபெரும் தமிழ்க் கனவு’ நூலினை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த மூத்த பத்திரிகையாளரும், மொழிபெயர்ப்பாளருமான விஜயசங்கர், சிறுகதை மொழிபெயர்ப்பாளர் இராமகிருஷ்ணன், கைட்டன் மற்றும் ஹால் எழுதிய ‘மருத்துவ உடற்செயலியல்’ நூலை மொழிபெயர்த்த மருத்துவர்கள் பாலசுப்பிர மணியன், ரூபஸ்ரீ மற்றும் செந்தில்குமார் ஆகியோர் பாராட்டப்பெற்றனர்.